## வாக்குறுதிகள் :

# என்ன வளம் இல்லை நம்ம ஈரோட்டில் ?!

## 1 - பொது வளர்ச்சித் திட்டங்கள்

1 குடும்ப அட்டை கிடைக்காத அனைத்து குடும்பத்தாருக்கும் உடனடியாக குடும்ப அட்டை கிடைக்க ஆவண செய்யப்படும்.

2 முன்பதிவு செய்யும் அனைத்து தொகுதி மக்களுக்கும் 24 மணி நேரத்தில் சுய தொழில் வாய்ப்பு அமைத்துத் தரப்படும்.

3 துரித நீதிமன்றம் (Tatkal Court) அமைக்க ஆவண செய்யப்படும்.

4 ஈரோடு நகருக்குள் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க புதிய சாலை வசதி ஏற்படுத்தப்படும்.

5 ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் தினசரி மக்கள் குறைதீர்க்கும் மையம் செயல்பட ஆவண செய்யப்படும்.

6 அரசு வணிக வளாகங்களில் உள்ள கடைகளை கட்சி பாகுபாடுயின்றி தகுதியான தொழில் முனைவோருக்கு உரிய வாடகைக்கு உடனடியாக வழங்க வழிவகை செய்யப்படும்.

7 100% லஞ்சம் இல்லா துரித சேவை மக்கள் நல அலுவல்கள்

8 ஈரோட்டின் வளர்ச்சி, தொழில், கல்வி, வேலை வாய்ப்பு, விவசாயம் மற்றும் சுற்றுலா போன்ற அனைத்து துறை சார்ந்த செயல்பாடுகள் அனைத்து மக்களுக்கும் சென்றடையும் வகையில் ஈரோடு கிழக்கு தொலைக்காட்சி மற்றும் ஈரோடு கிழக்கு எஃப்.எம் அமைக்க ஆவண செய்யப்படும்.

9 ஓபன் ஃபோரம் (Open Forum) – மாதம் ஒரு முறை சட்டமன்ற உறுப்பினரை நேரில் சந்தித்து தங்களது பிரச்சனைகளுக்கு தீர்வு காண உரையாட கூட்டம் நடைபெற வழி வகை செய்யப்படும்.

## வாக்குறுதிகள் :

## என்ன வளம் இல்லை நம்ம ஈரோட்டில் ?!

## 2 - வேலை வாய்ப்புத் திட்டங்கள்

10 www.eec.net.in என்ற ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கான சிறப்பு இணையதளத்தில் பதிவு செய்யும் வேலையில்லா பட்டதாரிகளுக்கு உடனடியாக – 100% தகுதிகேற்ற வேலை வாய்ப்பு வழங்க ஆவண செய்யப்படும் *.

11 தொகுதியில் 1 வருடத்திற்குள் 0% வேலையில்லா பட்டதாரிகள் என்ற இலக்குடன் தனி சிறப்பு (Tatkal Job Portal) துரித வெளி மாநிலம் / வெளி நாடுகளுக்கான வேலை வாய்ப்பு இணைய வழி அலுவலகம் செயல்படுத்தப்படும்.

12 தகுதி மற்றும் முன் அனுபவ அடிப்படையில் வேலையில்லா ஆசிரியர்கள் அனைவருக்கும் உடனே வேலை பெற்றுத் தர ஆவண செய்யப்படும்.

13 கல்லூரி படிப்புகளுக்கான தொழில் வழிகாட்டி மையம் (Career Guidance Cell)

14 உலக அளவில் மென்பொருள் வேலைவாய்ப்பை அதிகரிக்க ஈரோடு தகவல் தொழில்நுட்ப பூங்கா (Erode Tidel Pari / IT Park) அமைக்க வழி வகை செய்யப்படும்.

15 மருத்துவர்கள், மருத்துவ பணியாளர்கள் மற்றும் துணை மருத்துவ பணியாளர்கள் வெளிநாட்டில் வேலை பெற ஓவர்சீஸ் வேலை வாய்ப்பு அலுவலகம் அமைக்க வழிவகை செய்யப்படும்.

16 ஈரோட்டில் உள்ள திரைப்பட கலைஞர்கள் மற்றும் தொழிலாளர்கள் மேம்பட ஈரோடு திரைப்பட தயாரிப்பு நிறுவனம் அமைத்து மாநில, தேசிய, உலக அளவில் சிறந்த திரைப்படங்கள் உருவாக ஆவண செய்யப்படும்.

## வாக்குறுதிகள் :

# என்ன வளம் இல்லை நம்ம ஈரோட்டில் ?!

## 3 - கல்வி வளர்ச்சித் திட்டங்கள்

**17** சிறப்பு TNPSC கோட்சிங் மையம் அமைக்க ஆவண செய்யப்படும்.

**18** சிறப்பு NEET கோட்சிங் மையம் அமைக்க ஆவண செய்யப்படும்.

**19** ஈரோடு நவீன திரைப்பட கல்லூரி (Erode Flim Institute) அமைக்க ஆவண செய்யப்படும்.

**20** மத்திய அரசின் வேலைவாய்ப்பு பெற சிவில் சர்வீஸ் / இரயில்வே பணிக்கு சேர சிறப்பு கோட்சிங் சென்டர் அமைக்க ஆவண செய்யப்படும்.

**21** தற்போதைய 76% படிப்பறிவு 100% ஆக உயர்த்த ஆவண செய்யப்படும்.

**22** ஈரோட்டில் மத்திய பல்கலைக் கழகம் (Erode Central University) அமைக்க ஆவண செய்யப்படும்.

## வாக்குறுதிகள் :

## என்ன வளம் இல்லை நம்ம ஈரோட்டில் ?!

### 4 - ஆரோக்கியம் / சுகாதார வளர்ச்சித் திட்டங்கள்

23 வெறிநாய் கடியிலிருந்து மக்களை காக்க செல்லப் பிராணிகள் கணக்கெடுப்பு எடுக்கப்படும்.

24 அனைத்து பூங்காக்களிலும் நடைபயிற்சி செய்ய ஏதுவாக புதுபிக்கப்படும்.

25 ஈரோட்டில் தன்னிகரற்ற ஒலிம்பிக் அகாடமி (Olympic Academy) அமைக்க ஆவண செய்யப்படும்.

26 அனைத்து வகையான விளையாட்டுகளிலும் ஈரோடு மாணவர்கள் சாதிக்க விளையாட்டிற்கென்ற சிறப்பு பள்ளி (Special Sports School) அமைக்க வழி வகை செய்யப்படும்.

27 டாஸ்மாக் (TASMAC) இல்லா ஈரோடு கிழக்கு தொகுதி அமைக்க வழி வகை செய்யப்படும்.

28 2028 ஆம் ஆண்டு நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டிகளில் ஈரோட்டில் இருந்து வீரர்கள் பங்கேற்க 140 ற்கும் மேற்பட்ட விளையாட்டுகளுக்கும் சிறப்பு பயிற்சி அளிக்க ஈரோடு ஒலிம்பிக் அகாடமி அமைய ஆவண செய்யப்படும்.

29 வார்டு தோறும் நடமாடும் ஆரம்ப சுகாதார நிலையம் உருவாக்க வழி வகை செய்யப்படும்.

30 இந்தியாவின் புற்றுநோய் தலைநகரமாக உள்ள ஈரோட்டில் மக்களின் உயிர் காக்க பல்நோக்கு புற்றுநோய் மருத்துவ மையம் அமைய ஆவண செய்யப்படும்.

31 0% பச்சிளம் குழந்தைகள் இறப்பு சதவிகிதம் (Infant Mortality Rate) என்ற குறிக்கோள் அடைய தொகுதியின் சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் மேம்படுத்தப்படும்.

32 ஈரோட்டில் உள்ள அனைத்து காய்கறி மார்க்கெட்-ஐ முற்றிலுமாக சுத்தம் மற்றும் சுகாதாரமான வகையில் நவீன முறையில் மாற்றியமைக்க ஆவண செய்யப்படும்.

# என்ன வளம் இல்லை நம்ம ஈரோட்டில் ?!

## 5 - மறுவாழ்வு திட்டங்கள்

33 பள்ளி மற்றும் கல்லூரிகளில் போதை தடுப்பு பிரச்சாரம் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

34 தேவைப்படுவோருக்கு துரிதமாக போதையிலிருந்து விடுதலை பெற ஆவணம் செய்யப்படும்.

35 மாற்றுதிறனாளிகள் மற்றும் முதியோர்களுக்கான சிறப்பு பராமரிப்பு & மருத்துவ மையம்

36 பிச்சைகாரர்கள் மறுவாழ்வு மையம் அமைய ஆவண செய்யப்படும்.

37 சிறப்பு போதை மீட்பு மறுவாழ்வு மையம் உடனடியாக அமைக்க வழிவகை செய்யப்படும்.

38 நாள்பட்ட நோய்களில் இருந்து மக்களை காக்க தனி சிறப்பு உயர்மட்ட மறுவாழ்வு மருத்துவ மையம் (Centre of Excellence - Rehabilitation Institute) அமைக்க ஆவண செய்யப்படும்.

## வாக்குறுதிகள் :

# என்ன வளம் இல்லை நம்ம ஈரோட்டில் ?!

## 6 - மக்கள் உதவி / மேம்பாட்டுத் திட்டங்கள்

39 ஈரோடு கிழக்கு தொகுதிக்கு உட்பட்ட கட்டிடம் மற்றும் வீடுகளுக்கான தற்போதைய மாநகராட்சி சொத்து வரி ரூ. 5.20 (சதுர அடிக்கு) லிருந்து கோவை மாநகராட்சிக்கு சமமான சீரான சொத்து வரி சதுர அடிக்கு 50% அளவிற்கு குறைக்க வழிவகை செய்யப்படும்.

40 பெண் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு GPS ஸ்மார்ட் வாட்ச் வழங்க வழிவகை செய்யப்படும்.

41 இல்லந்தோறும் ரூ. 10,000/- மதிப்புள்ள பொங்கல் தொகுப்பு வழங்க வழிவகை செய்யப்படும்*.

42 வீடு இல்லாதவர்களுக்கு தொகுப்பு வீடு கிடைக்க ஆவண செய்யப்படும்.

43 இல்லந்தோறும் சமையல் கேஸ் பைப் கனைக்ஷன் கிடைக்க வழி வகை செய்யப்படும்.

44 சுமை தூக்குவோர், கை வண்டி / மாட்டுவண்டி வைத்திருப்போர், ஆட்டோ ஓட்டுநகர்களுக்கு சிறப்பு தொகுப்பு வீடு கிடைக்க வழிவகை செய்யப்படும்.

## வாக்குறுதிகள் :

## என்ன வளம் இல்லை நம்ம ஈரோட்டில் ?!

### 7 - வாகனம் / போக்குவரத்து வளர்ச்சித் திட்டங்கள்

45 05-02-2025 ஆம் தேதிக்குள் www.eec98.in என்ற ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கான சிறப்பு இணையதளத்தில் பதிவு செய்யும் ஒரு குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு இருசக்கர மின்சார வாகனம் (EV moped / EV Scooter) மானியத்துடன் மிகக் குறைந்த விலையில் கிடைக்க வழிவகை செய்யப்படும்*.

46 05-02-2025 ஆம் தேதிக்குள் www.eec98.in என்ற ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கான சிறப்பு இணையதளத்தில் பதிவு செய்யும் ஒரு குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு நான்கு சக்கர மின்சார வாகனம் (EV Car) மானியத்துடன் மிகக் குறைந்த விலையில் கிடைக்க வழிவகை செய்யப்படும்*.

47 வீதி மற்றும் பூங்கா தோறும் EV சார்ஜிங் சென்டர் (EV Charging Point) அமைக்க ஆவண செய்யப்படும்.

48 ஒவ்வொரு வாரம் திங்கள் கிழமை அன்று ஈரோட்டில் நடைபெறும் டெக்ஸ்டைல் சந்தை பகுதியில் போக்குவரத்து இடையூறுகளை சரிசெய்ய முதல் அடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைக்க வழிவகை செய்யப்படும்.

## வாக்குறுதிகள் :

## என்ன வளம் இல்லை நம்ம ஈரோட்டில் ?!

### 8 - விவசாய / தொழில் வளர்ச்சித் திட்டங்கள்

49 உலக மஞ்சள் வர்த்தக மையம் (World Turmeric Trade Centre) அமைத்து மஞ்சள் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஏற்றுமதிக்கு தனி கவனம் செலுத்தப்படும்.

50 உலக நீரா வர்த்தக மையம் (World Neera Trade Centre) (தென்னை / பனை விவசாயிகளுக்கு) அமைத்து ஏற்றுமதிக்கு தனி கவனம் செலுத்த வழிவகை செய்யப்படும்.

51 கரும்புக்கு தனி ஆதார விலை நிர்ணயம் செய்யவும், உடனடி பண பட்டுவாட செய்யவும், கரும்பு விவசாயிகள் பயன்பெற வாகன எரிபொருள் எத்தனால் தொழிற்சாலை அமைக்க வழிவகை செய்யப்படும்.

52 ஈரோடு மக்களுக்கு இயற்கையான, ஆரோக்கியமான, சுகாதாரமான, சுவைமிக்க குளிர்பானம் சுலபமாக கிடைக்கவும், தென்னை / கரும்பு விவசாயிகள் பயன்பெறவும் வீதி தோறும் நீரா மற்றும் கரும்புசாறு நிலையம் அமைக்கப்படும்.

53 தென்னை / பனை மர நார் / மட்டை உபரி பொருட்கள் ஏற்றுமதி மையம் அமைக்க ஆவண செய்யப்படும்.

54 விவசாயிகளின் நன்மைக்காக விளை பொருட்களை மயில்களிடம் இருந்து பாதுகாக்க மயில்கள் சரணாலயம் (Peacock Santuary) உடனடியாக அமைக்க வழி வகை செய்யப்படும்.

55 ஆடு, மாடு, எருமை மற்றும் கால்நடைகள் கணக்கீடு மற்றும் காப்பீடு வழங்க ஆவண செய்யப்படும்.

56 மாட்டுப் பாலுக்கு ஒவ்வாமை உள்ளவர்கள் பயன்பெறும் வகையில் தேங்காய்பால் தயாரிப்பு ஆலை மற்றும் தேங்காய்பால் பூத் அமைக்க வழிவகை செய்யப்படும்.

57 நெசவு தொழில் மேம்பட (Special Textile Economic Development Centre) சிறப்பு நெசவு பொருளாதார மேம்பாட்டு மையம் அமைய ஆவண செய்யப்படும்.

58 சிறு / குறு நெசவு கூடங்களுக்கு சோலார் தகடுகள் மூலம் மின்சார கட்டணம் குறைய ஆவண செய்யப்படும்.

59 உலக தரம் வாய்ந்த (Mobile Phone Manufacturing Unit) கைபேசி தயாரிப்பு நிறுவனம் ஈரோட்டில் அமைய ஆவண செய்யப்படும்.

## வாக்குறுதிகள் :

## என்ன வளம் இல்லை நம்ம ஈரோட்டில் ?!

### 9 - நகர மேம்பாட்டுத் திட்டங்கள்

60 மாசு இல்லா ஈரோடு மாநகரம் அமைய வழிவகை செய்யப்படும்.

61 பிச்சைகாரர்கள் இல்லாத மாநகரம் உருவாக்க வழிவகை செய்யப்படும்.

62 தெரு நாய் தொல்லையில்லா ஈரோடு மாநகரம் அமைய வழிவகை செய்யப்படும். மேலும் தெருநாய்கள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு மையம் அமைக்கப்படும்.

63 பெட்ரோல் ஆட்டோகளை மின்சார வாகனமாக்க சிறப்பு மானியம் வழங்க ஆவண செய்யப்படும்.

64 டவுன் பஸ் / மினி பஸ் / ஆட்டோகளை சி.என்.ஜி. (மாசு / புகையில்லா வாகனம்) ஆக மாற்ற ஆவண செய்யப்படும்.

65 ஈரோட்டின் கழிவு நீரை சுத்திகரிக்க உடனடியாக நவீன சுத்திகரிப்பு ஆலை அமைக்க வழிவகை செய்யப்படும்.

66 நிலத்தடி நீரை மாசுபடுத்தும் ஈரோட்டின் திடகழிவுளை நவீன முறையில் மறுசுழற்சி செய்யவும், மின்சாரம் தயாரிக்கவும் மற்றும் வெளியேறும் கழிவுகளை தகுந்த பாதுகாப்புடன் அப்புறப்படுத்த வழிவகை செய்யப்படும்.

67 தனி ஈரோடு மின்சார வாரியம் மற்றும் மாதாந்திர மின்கட்டண வசதி செய்ய வழி வகை செய்யப்படும்.

68 காவேரி வெள்ள நீர் சேமிப்பு மற்றும் மாற்று பாதை திட்டம் அமைக்க வழிவகை செய்யப்படும்.

69 நலிவுற்ற சிறு / குறு தொழில்களுக்கு மின்சார மானியம் வழங்க ஆவண செய்யப்படும்.

70 கூட்டு குடும்ப வாழ்க்கையை பின்பற்றும் குடும்பங்களுக்கு அனைத்து விதமான சலுகைகளுடன் கூடிய (Erode Blue Zone) ஈரோடு நீல மண்டலம் அமைக்க ஆவண செய்யப்படும். (சராசரி வாழ்நாளை விட அதிக நாட்கள் உயிர்வாழும் மக்கள் வசிக்கும் தனி பகுதிகளை நீலம் மண்டலம் என குறிப்பிடப்படும்.)

71 வார்டு / பூங்கா தோறும் பெண்களுக்கு தற்காப்பு பயிற்சி மற்றும் மக்கள் பாதுகாப்பிற்காக தொகுதி முழுவதும் தெருக்கள் தோறும் கண்காணிப்பு கேமரா (CCTV Camera) பொருத்தப்படும்.

72 தொகுதி முழுவதும் தரமான சீரான சமமான சாலைகள் அமைக்க மற்றும் வேக தடையில்லா சாலைகள் உருவாக்க வழி வகை செய்யப்படும்.

73 வாகன ஓட்டிகளுக்கு நேரத்தை சேமிக்கும் வகையில் போக்குவரத்து சிக்னல் இல்லா சாலைகள் அமைக்க வழி வகை செய்யப்படும்.

74 மக்கள் கூடும் பொது இடங்களில் தானியங்கி கழிப்பிட வசதி ஏற்படுத்த வழி வகை செய்யப்படும்.

75 ஈரோடை சுத்தம் செய்யப்பட்டு, அதன் மேல் சோலர் தகடுகள் (Green Energy) மூலம் நகருக்குத் தேவையான மின்சாரம் தயாரிக்க ஆவணம் செய்யப்படும்.

76 மக்கள் கூடும் பொது இடங்களில் தானியங்கி குடிநீர் வழங்கும் மையம் அமைக்க ஆவண செய்யப்படும்.

77 தமிழகத்தில் ஈரோட்டில் அதிக அளவு GST கட்டப்பட்டு வருகிறது. நாம் கட்டும் GST வரி முழுவதும் மேற்கண்ட ஈரோட்டின் அனைத்து வளர்ச்சி திட்டங்களுக்கு பயன்படுத்த வழிவகை செய்யப்படும்.

78 ஈரோடை சுற்றியுள்ள சாய பட்டறை மற்றும் தோல் பதனிடும் ஆலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகளை சுத்திகரிக்க பொது சுத்திகரிப்பு மையம் அமைக்க ஆவண செய்யப்படும்.

## வாக்குறுதிகள் :

## என்ன வளம் இல்லை நம்ம ஈரோட்டில் ?!

### 10 - சுற்றுலா வளர்ச்சித் திட்டங்கள்

79 சுற்றுலா வசதிகளை பெருக்கவும், வாக நெரிசலை தவிர்க்க ஈரோடு பேருந்து நிலையத்திலிருந்து இரயில் நிலையம் சென்று வர ரோப் கார் (Rope Car) வசதி உருவாக்க ஆவண செய்யப்படும்.

80 ஈரோடு மாவட்டத்தில் உள்ள சுற்றுலா தலங்களுக்கு வாரத்தின் அனைத்து நாட்களிலும் ஈரோடு பஸ் நிலையத்திலிருந்து (காலை 7 மணி முதல் இரவு 7.00 மணி வரை) அழைத்துச் சென்று வர ஆவண செய்யப்படும்.

81 ஈரோட்டில் வாட்டர் தீம் பார்க் அமைக்க ஆவண செய்யப்படும்.

82 ஈரோடு விலங்குகள் சரணாலம் அமைக்க ஆவண செய்யப்படும்.

“மக்கள் வேந்தன்” மறுவாழ்வு மருத்துவ நிபுணர்

# செல்லகுமாரசாமி T.S.

MBBS., MD., அவர்கள் வெற்றி பெற்றவுடன்
மேற்கண்ட அனைத்து வாக்குறுதிகளும்
10-02-2025 தேதி முதல் நடைமுறைபடுத்த
ஆவண செய்யப்படும்.